[20th March 1965

கனம் திரு. வெ. ராமையா : தளர்த்த முடியாது. நெல் வைத்திருப்பவர்கள் தங்களுடைய, சொந்த உபயோகத்திற்கு என்று அனுமதி கேட்டால், ஸ்தலத்தில் இருக்கும் டி.எஸ்.ஓ. பரிசீலித்து அனுமதி கொடுப்பார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : சர்க்காரே கொள்முதல் செய்வது என்று இருக்கும்போது, வியாபாரிகளுக்குக் கொடுப்பது ஏன் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாகக் கடன் வசதிகள் கொடுத்துச் செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : அதையும் அரசாங்கம் செய்கிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தலைவர் அவர்களே, எல்லா இன நெல்லுக்கும் தற்பொழுது சர்க்காரால் கொடுக்கப்படும் விலையைவிட, சென்ற ஆண்டில் 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்தார்கள். அந்த முறையைப் பின்பற்றி, இந்த ஆண்டும் செய்வார்களா என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஒரே ஒரு முறைதான், அது சர்க்கார் நிர்ணயித்திருக்கும் முறை.

Family card system for villages

* 290 Q.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to extend the Family card system to villages?

THE HON. SRI V. RAMAIAH : The answer is in the negative.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களுக்குக் கார்டு இல்லை என்று சொன்னார்கள், என்னுடைய பகுதியில் நான்கு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதிலே மூன்று பஞ்சாயத்துக்களிலே சுமாரான நெல் வ்வசாயம் செய்கிற பகுதியாக இருக்கிறது. ஆலத்தூர் பஞ்சாயத்தில் அப்படியிருக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு என்று சர்க்கார் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கார்டு கொடுக்கவில்லை என்றாலும், தானியம் கொடுக்கும் சமயத்தில் கலெக்டர் அங்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கார்டு நகர்புறங்களில் நடைமுறையில் ஏற்படுத்தியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அனுபவம் என்ன ? அதை ஒட்டி எடுக்க இருக்கிற நடவடிக்கை என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த நகர்புறங்களில் கார்டு கொடுத்திருப்பதைத் தொடர்ந்து செய்வோம். அதன் காரணமாக, ஓரளவு திருப்பித் திருப்பி வாங்கும் பழக்கம் அடியோடு நின்றுவிட்டது.

திரு. சரு. சின்னச்சாமி : சார், கிராமங்களில் வாங்கி பஃப்பர் ஸ்டாக் வைக்கிறோம் என்று அமைச்சர் சொன்னார்கள். உணவுப் பொருள், அரிசிப் பற்றாக்குறை இடங்களுக்கு, அதிகாரிகள் கொடுப்பார்கள் என்றும் சொன்னார்கள். எங்கள் கிராமத்தில் அரிசிக்கு நெல் விளையவில்லை. கூட்டுறவு சங்கமும் இல்லை, வேறு கடையும் இல்லை. அங்கே அரிசி கொடுக்க என்ன ஏற்பாடு என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

20th March 1965]

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, இதெல்லாம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஏற்பட வேண்டிய சர்ச்சைகள். கிராமங்களில் கொடுக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், சென்ற ஆண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படாது என்கிற உறுதியை மக்களுக்குச் சர்க்கார் கொடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் உறுதிமொழி சொல்வதை விட, திரும்பத் திரும்பக் கேட்கப்பட்ட கேள்வி யெல்லாம், அங்கத்தினர் கவனித்து இருந்தால் தெரிந்திருக்கும். அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்று. போதுமான நெல்லை கைவசம் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும், நீலகிரி ஜில்லாவைத் தவிர, கொள்முதல் செய்து, தேவைப்படும் இடங்களுக்கு, லீன் மாதங்களில் கொடுக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மொத்த விற்பனை அரிசி வியாபாரிகள்

* 291 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் அரிசி விற்பனைக்கென்று இருக்கிற மொத்த வியாபாரிகள் எத்தனை பேர் ?

(இ) கூட்டுறவு மொத்த வியாபாரக் கடைகள் எவை எவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 10 (Ten).

(*b*) (1) Madras State Co-operative Marketing Society, 379, N.S.C. Bose Road, Madras.

(2) Park Town Co-operative Wholesale Stores, Ltd., 29, Ekambareswarar Agraharam, Madras-3.

(3) Triplicane Urban Co-operative Society, Ltd., 109. Big Street, Madras-5.

(4) Chingleput District Co-operative Supply and Marketing Society, Kandappa Chetty Street, Madras-1.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த ஹோல்சேல் வியாபாரிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : புதிதாகத் தேர்ந்து எடுக்கப்படவில்லை. முன்கூட்டியே எடுக்கப்பட்டவர்கள் தான். அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்கலாம்.

மாவட்டங்களிடையே உணவு தானியங்கள் கொண்டு போதல்

* 292 **கேள்வி—திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள உணவு தானியங்கள் ஒரு மாவட்டத்தில் இருந்து வேறு ஒரு மாவட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தது உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Yes.